Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59,300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ஹூ வைகாசி மீ கஉ வெள்ளிக்கிழமை (25 MAY. 1956) [இல - எ]

கோள்கொண்டு குறிப்பறியும் கூர்மதி

# வான நிலை கணித்து மழை வளம் மதித்தல்

——o——

## விண்மீன் வீழ்ச்சியிற் பேரிடர் அறிதல்

(முற்றொடர்)

"நிறைநீர நீரவர்கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு"
(குறள் 782)

என்று வள்ளுவர் வளர்பிறை தேய்பிறை என்பவற்றை பெரியோர் கேண்மைக்கும், பேதையார் நட்புக்கும் உவமைகூறியதைக் காண்க. நாலடியாரில் 125ம் பாடலும் இதே கருத்துள்ளது. புறம் 3ல் "உவவு மதி உருவின் ஓங்கல் வெண்குடை" என்று கூறப்படுவதையும் அதற்கு உரையாசிரியர் "உவவு மதியாகிய பௌர்ணமி நிலாவின் முழு வட்டத்தை ஒத்த நின் குடை' யென உரை கூறுவதையும் புறம் 65-ல் உவவுத் தலை வந்த பெருநாளமையத்தை இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர் புன்கண் மாலை மலை மறைந் தாங்கு' எனப் பௌர்ணமியன்று ஞாயிறு மறையத் திங்கள் தோன்றுந் தன்மையைக் குறிப்பதையுங் காண்க.

கோவலன் மாதவினை விட்டு, கண்ணகிபால் சென்று, அங்கிருந்து இருவரும் பிறரறியா வண்ணம் விடியற்காலையில் சென்றார்கள். அவர்கள் புறப்பட்ட நேரத்தை,

'வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாட் கங்குல்"

என்று சிலப்பதிகாரம் (10:1—3) குறிப்பிடுகிறது. இதற்கு அடியார்க்கு நல்லார், வைகாசி இருபத்தொன்பதில் முற் பக்கத்தின் பதினாலாந் திதியில் செவ்வாய்க் கிழமையும் கேட்டையும் பெற்ற நாச யோகத்தில் வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலே கோவலன் மதுரைக்குப் புறப்படலாயினன்' என்று கூறியதையும் கவனிக்கத் தக்கது.

பண்டைத்தமிழர் கோள்களின் நிலையிலிருந்துமழை முதலியவற்றை அறியும் புலமையுடையோராயிருந்தனர். கோள்களின் மூரணிய நிலையில் மழை பெய்யாது. மழைக்கோள் வெள்ளி (Venus). மழைக்கோள் — மழைக்குரிய கிரகம். வெள்ளியைப்பற்றிச் சங்க இலக்கியம் விரிவாகக் கூறுகிறது. "வெள்ளி தோன்ற புள்ளுக் குரலியம்ப" (புறம் 385) "வெள்ளியும் இரு விசும்பேர்தரும் .........." (புறம் 397) "மதிநிலாக் கரப்ப வெள்ளி ஏர்தர" (புறம் 398), "விரிகதிர்

**திரு ப. இ. தேவராசா**
**கொழும்பு**

வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்"(பொருநாற்றுப்படை 71—72), "விளக்குறு வெள்ளி முளைத்து முன் ரேன்ற" (பெருங்கதை 1 53:81) "வெள்ளி முளைத்த விடியல்" புறப்பொருள் வெண்பாமாலை 206), "வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று" (திருப்பாவை, 13). என்றிவ்விதமாக வெள்ளியைக் குறிக்கப்பட்டுள்ளது. இவை விடி வெள்ளியைக் குறிக்கின்றன. செகப்பிரியர் என்ற ஆங்கிலப் புலவர் வெள்ளியைப்பற்றிக் கூறும்போது "பகலில் ஒரு ஞாயிறு உண்டு. ஆனல், இரவிலோ அநேகம் பிரகாசிக்கும்" என்றார். The day has but one Sun, by night ten thousand shine—shakespeare) வெள்ளி தெற்கே தோன்றிலும், தூமம் தோன்றினும்: மைமீன் புகையினும், அந்நாட்களில் மழையின்றிப்பஞ்சம் உண்டாகும்.

"வெள்ளி தென்புலத் துறைய
விளைவயற் பள்ளம்
வாடிய பயனில் காலை"
(புறம் 338)
இலங்குகதிர்வெள்ளி
தென்புலம்படரினும்
- புறம் 35

தொடர்ச்சி 3ம் பக்கம்

அரசியல் அலை

# 'தனிச் சிங்கள'த் தாக்கலின் தாற்பரியம்

## முசுலீம் தலைவர்களும் முற்ருய் எதிர்க்கின்றனர்

### அமைச்சவையில் ஆரவாரமா?

மாறி மாறி யோசிக்கின்ருர்கள். திருப்பித் திருப்பித் திருத்தஞ் செய்கின்ருர்கள் ஆனல் இந்தச் சிங்களச் சட்டத்தைப் பற்றி செயலாற்றுவோா யாவருக்கும் பூரண திருப்தி இன்னமும் வரவில்லையாம்!

பலபட்டடை வேலைமுறை எவ்வாறு நேரான ஒரு ஒழுங்குக்கு வரமுடியும். புத்தகுருயாருக்கோ மெத்தானந்தாக்களுக்கோ சித்த;சம்மதமில்லையாம் பிரதமருக்கோ பிறர் சிலருக்கோ சிறுபான்மையினருக்குச்செய்வது பழி என்ற எண்ணம் எழுந்து விட்டதாம். ஆனல் — தேர்தலிற் கொடுத்த வாக்கு என்ற நினைவும் மாறவில்லையாம்' என்ன பரிதாப நிலை.

இந்த நெருக்கடிக்குள்ளே அமைச்சவையிலும் வேறு காரணங்கள் பற்றியும் அமைதியீனம் ஏற்பட்டுவிட்டதாக வதந்திகள் உலவுகின்றன. தீவிரவாதிகள் ஆண்டுச் செலவு வரவுத் திட்டத்திலே பொருளாதாரப் புதுக்கொள்கைகளைப் புகுத்திவிட முனைந்து நிற்கின்ருர்கள் என்றும் இந்த மாற்றம் அரசாங்கத்துக்கே ஆபத்தைக் கொண்டுவந்துவிடும் என்று முதல் அமைச்சர் முதலாகப் பலர் அஞ்சுகிருர்கள் என்றும் பலம் குறைந்து மனந் தளர்ந்திருக்கும் பழைய ஐ. தே கட்சியை அமைச்சவைக்குள் இழுத்துவிட யோசனை இருக்கின்றதென்றும் ஊர்க்கதைகள் பல உண்டு.

முசுலீம் தலைவர்கள் தாங்கள் அடைந்த ஏமாற்றத்தை நன்குணர்ந்து ஓடோடியும் உண்மையை உணர்ந்துவிட்டனர் சிறுபான்மையினரைப் பிரித்துச் சிங்களச் சட்டத்தைப் புகுத்திவிட நினைத்த புது மந்திரி சபையாரும் மக்கள் ஐக்கிய முன்னணியும் காலப் போக்கைக் கவனித்துவிடுவார்களேயானல் இந்த விதமாகத் தொடர்ந்து சர்வாதிகாரச் சூழ்ச்சிகளைச் செய்ய மாட்டார்கள்.

# 'தனிச் சிங்கள'ச் சட்டத்திற்கு தமிழகம் எங்கும் எதிர்ப்பு

——o——

## ஒருமொழியைமட்டும் ஒருபொழுதும் ஏற்கமாட்டோம்

——o——

### தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத் தீர்மானம்

மூன்று தலைவர்கள் ஒருமுகமாய்ச் சமுகமளித்தனர்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடந்த வலிகாமம் வடக்குத் தமிழ்ஆசிரியர் சங்க ஆதரவில் நடந்த மாபெருங்கூட்டமொன்றில திருவாளர்கள்: ஜீ. ஜீ. பொன்னம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், சி. சுந்தரலிங்கம் ஆகிய மூவரும் ஒருங்கிருந்து பேசினர்கள். மூன்று கொள்கைகளுடையவர்களாய் முன்னர் மூவரும் தோன்றி வந்தபோதிலும் மூவரும் ஒரே கொள்கையுடையவர்களாய் இக்கூட்டத்திற் காட்சியளித்தனர். அரச கரும மொழியாகச் சிங்களம்மாத்திரமேயாயிருப்பதை எதிர்ப்பதற்கு வழிகளைக் காட்டி அக்கூட்டத்தில் மூவரும் உறுதி செய்தனர்.

'இந்துசாதன' ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் எதிர்ப்பு இயக்கத்தின் ஆக்க வழியாக ஈழத் தமிழகத்திலே ஒரு பல்கலைக் கழகம் அமைத்தல் வேண்டும் என்று கூறினர்.

ஏகமனதான தீர்மானம்

"சிங்களம்மட்டும் என்ற சட்டத்தை எம்மாலானமட்டும் முழுமூச்சுடன் எதிர்த்தல் வேண்டும் அதனை எந்நிலையிலும் நாம் ஏற்றுக் கொள்ளுதல் கூடாது" இந்தத்தீர்மானம் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வெற்றிக்கு அறிகுறி

தமிழ் மொழியினதும், தமிழ்பேசும் மக்களினதும் எதிர்காலம்பாதிக்கப்படாதபடி பாது காப்பதற்காகத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு தமிழ் மக்களை வழிநடத்தவேண்டுமெனத் தமிழ் ஆசிரியர்களும் தாய் தந்தையர்களும் விரும்புகின்றனர். சிங்களம் மட்டும் என்ற கொள்கையை எதிர்த்து நடத்தும் போராட்டம் வெற்றியைத் தரப்போகின்றதென்பதற்கு இன்றைய நிகழ்ச்சி ஓர் அறிகுறியாகும் எனப் பண்டிதர் எஸ். பொன்னுத்துரை குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. கே. சுந்தரம் அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

### முஸ்லிம் சங்க மொழித் தீர்மானம்

அகில இலங்கை முஸ்லிம் சங்க மத்தியநிருவாகசபை, தலைவர் வைத்திய கலாநிதி எம் சி.எம் கலில் அவர்கள் தலைமையில்கூடி அரசாங்கத்தின் அரசகரும மொழித் தீர்மானம்பற்றி ஆலோசித்தது. அத்தருணம் சிங்களம் மாத்திரம் தனி அரசகரும மொழியாவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்னும் பிரேரணை ஒன்று

தொடர்ச்சி 5ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

இந்துசாதனம்

யாழ். துர்முகி ஹூ வைகாசி மீ கஉ உ வெள்ளிக்கிழமை

## "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல"

—0—

வேதநெறிதழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க அவதாரஞ் செய்த திருஞானசம்பந்தத் திருத் தொண்டனுர் 'அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்லவும் தோற்றம் ஆனுர் என்று பெரிய புராணம் விரித்து விளக்குகின்றது.

அசைவில்லாத செழுந் தமிழ் வழக்குக்கு ஆபத்துத் தோன்றியிருக்கும் இக் காலத்திலே ஈழத் தமிழகத்து மக்களின் எண்ணம் எல்லாம் திருஞான சம்பந்த நாயனுர்பாற் செல்லும் என்றே நாம் நினைக்கின்ருேம்.

பரசமயம் நிராகரிக்கத் திருஅவதாரஞ்செய்த சிவம் மணக்கும்பிள்ளையாரின் குருபூசை வைகாசித் திங்களிற் பொருந்தும் மூல நாளாகும் என்பதை யாவரும்அறிவர்.' இந்த ஆண்டில் அத் திருநாள் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை ஆகும். செந்தமிழ் வழக்கும் அயல் வழக்கும ஒருங்கு நிலவி வந்த இந்நாட்டிலே மெய்ப் பொருள் காணும் அறிவில்லாத பொய்மையாம் அரசியல் ஆதிக்க வெறி கொண்டவர்கள் முன்னைய வழக்கை முற்ருய் ஒதுக்கி விட்டுப் பின்னையதாம் அயல் வழக்கை அரி ஆசனத் தமர்த்தி, ஆட்சி மொழியாகச் சிங்களத்தைபே ஏனையோர்மீது திணித்துவிடத் திட்டம் செய்யப்படும் இவ்வேளையில் ஞானத்தின் திருவுருவாகி ஞாலமுய்யவந்து அவ நெறி மாற்றிச் சிவநெறி ஆக்கித் தெய்வத்தமிழ் வளர்த்த திருஞானசம்பந்தத் திருத்தொண்டர் திருத்தாள்களைப் போற்றி ஈழத் தமிழகத்துக்கு இன்னல் இடுக்கண் எய்தாது தடுப்பதற்காக அன்னுர் மீண்டும் திரு அவதாரஞ் செய்தல்வேண்டும் என்று தமிழ் அன்பர்கள் இறைவனை மனம் மொழி மெய்யால் வழிபடல் வேண்டும். இந்த நன்னேக்கம் கொண்டு சிவபத்தர்கள் பன்னிருவர் கன்னித் தமிழ் காக்கும் கருணையாளனும் முருகப் பெருமானை நல்லூரில் வணங்கி விசாக நாளிலே திருக்கேதீச்சரத் தெய்வ சந்நிதானம் நோக்கிப் பாதயாத்திரை செய்து படர் அடவிஊடாகச்"செந்தமிழ் வழக்கு நின்று நிலவச் 'சிவ சிவ" என்று வேண்டிய வண்ணமாகச்

## செந் தமிழ் வழக்கு என்றும் நின்று நிலவ

—:0:—

## திருக்கேதீச்சரத்துக்குப் பாத யாத்திரை

வைகாசி விசாக விசேட சண்முக அருச்சனையை நல்லைக்கந்தன் கோயிலிற் கண்டு அக்காட்சியை உள்ளத்தூய்மையும் உணர்ச்சியான துணிவும்பெறுவதற்கு முதல் வழிபாடாக வைத்து, பன்னிரு பத்தர்கள் புதன்கிழமை மாலை ஐந்தரை மணியளவில் "சிவ சிவ செந்தமிழ் வழக்கு நின்று நிலவுக" என்ற வேண்டுகோளுடன் திருக்கேதீச்சரத்திலே வருகின்ற ஞாயிற்றுக்கிழமை திருஞான சம்பந்தர் குருபூசையை அப்புண்ணிய தலத்திலே முறைப்படி நடத்துவதற்காகப் பாதயாத்திரையாக பூநகரி, பல்லவராயன்கட்டுப் புதுப் பாதை வழியாகப் புறப்பட்டனர்.

சைவ அன்பர்கள் திருவாளர்கள்: மு. ஞானப்பிரகாசம், சு. பாநிருபசிங்கம், ஐ. பேரம்பலம், சி. முருகவேள் முதலிய பன்னிரு பத்தர்களையும் **இந்துசாதன** ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் வாழ்த்தி வழியனுப்பினர். இன்னமும் சில அன்பர்கள் இடை இடையே இந்தப் பாத யாத்திரையிற் சேர்ந்துகொள்வார்கள்.

## தமிழ் மக்கள் விடுதலைக்குத் திட சங்கற்பம்

### கொழும்பு நகரமண்டபத்தில் சமஷ்டிக் கட்சித் தீர்மானங்கள்

தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்று கொழும்பு நகரமண்டபத்தில் சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் சமுகமளித்தனர். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலையில் தமிழ் மக்கள் செய்யவேண்டியது என்ன என்பதுபற்றி ஆராயப்பட்டது. திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயக ; சி. வன்னியசிங்கம் எம். எம். மஸ்தாபா, இராசவாசல் முதலியார் எம் எஸ். காரியப்பர் சி. சுந்தரலிங்கம், ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், வி. ஏ, கந்தையா, சி. இராசதுரை வைத்திய கலாநிதி இ. எம். வி. நாகநாதன் முதலியோர் தங்கள் உள்ளக் கிடக்கைகளை எடுத்துக் கூறினுர்கள்.

தமிழ் மக்களில் சிங்களம் திணிப்பதை எதிர்க்கவேண்டும் என்றுப, பிள்ளைகளைச் சிங்களம் படிக்க விடக்கூடாதென்றும் சிங்கள மொழி ஆட்சி முறைகளை அரசாங்க சேவையிலுள்ளோர் கையாளக்கூடாதென்றும், அரசாங்கததிலிருந்து வரும் சிங்களக் கடிதங்களைத் தமிழ்மொழி பேசுவோர் ஏற்கக்கூடாதென்றும் தமிழ் மொழியிலேயே எதையும் அரசாங்கத்துக்கு எழுதவேண்டுமென்றுப, வடக்கு கிழக்கு மாகாண மக்கள் கைத்தொழில், கமத்தொழில் முதலியவற்றை விருத்தி செய்து தனித்தமிழ் இராச்சியம் நிறுவ ஆயத்தம் செய்ய வேண்டுமென்றும், இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஊர்வலமாகத் தமிழ் மக்கள் திருக்கோணமலைக்குச்சென்று அங்கே மாபெரும் மகாநாடு ஒன்று நடத்திச் சிங்கள மக்களால் குடியேற்றப்பட்ட தமிழ்ப் பகுதிகளைச் சத்தியாக்கிரகஞ் செய்து மீட்பதென்றும அதே முறையில் மேலும் குடியேறுவதைத் தடுப்பதெனறும் தமிழ்மொழியையும் தமிழ் மக்களையும் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இலங்கையின் எல்லைக்கு அப்பால் ஐக்கியநாட்டுச் சபை வரையில் கொண்டு செல்வதென்றும் தீர்மானங்கள் செய்யப் பெற்றன

## ஒரு மொழி இயக்கத்துக்கு எதிர்ப்பை உருவாக்க

### உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை எவை என உணருதல் வேண்டும்

—0—0—

"தனிச் சிங்கள"ச் சட்டம் சில நாட்களிலே பாராளுமன்றத்திற் கொண்டு வரப்படும் என்பது உண்மை. அதிலும் பன்மடங்கு உண்மை தமிழ்பேசும மககள், வகுப்புவாதத்தை வளர்க்கும் அந்தச் சன அடிமைச் சட்டத்தை முழு ஆர்வத்துடனும் எதிர்ப்பர்கள் என்பதே.

இந்த எதிர்ப்பு இயக்கம் எங்ஙனம் இயங்கப்போகின்றதென்பதுதான் இப்பொழுது ஆராயப்பட வேண்டிய கேள்வி.

எதிர்ப்பு இயக்கத்தில் ஆக்க வழி தாக்கவழி என இரு வகைகள் இயல்பாகத் தோற்றும் என்பது அநுபவ ஞானம். ஆக்கவழியில் ஒரு சாராரும் தாக்க வழியில் இன்னொரு சாராரும் ஆக இரு வகைகளிலும் நன்கு ஆராய்ந்து ஆவன செய்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

**ஆக்க வழி**

செயலாற்றுந் தொண்டர்கள் சித்தந் தெளிந்தவர்களாகப் பணிபுரிய வாழ்க்கையும் புனிதமாய் அமைதல் வேண்டும். நெறிநின்று பணி செய்வார் நெஞ்சத்தில் அஞ்சாமை என்னும் ஆற்றல் வளர்ந்து வரும். ஆகவே வாழ்க்கை நலம் என்ற வழியிலே தொண்டர்கள் செல்வது அத்தியாவசியகமாகின்றது. வாழ்க்கையில் உலக இயலின்படி உணவு, உடை, ஒழுக்கநடை முதலியன முக்கியமாகின்றன.

**உணவு**

தாய்மொழி தாய்நாடு தன்

செல்கின்ற தமிழ்த் தொண்டர்களையும் அவர்களின் தூயதுணிபையும் யாம் மிக மிகப் பாராட்டுகின்ருேம்.

மானம் என்ற முறையிலே தொண்டாற்றும் அத்தனை பேரும் நோன்பு நெறியில் நிற்கவேண்டியவர்கள் ஆகின்றனர். ஆனுல் இந்த இயக்கத்திலே ஒருநாள் உணவையோ ஒருபொழுது உணவையோ ஒறுக்குபபடி ஒழுக்கக் கட்டளை இடப்படவேண்டிய அவசியம் ஏற்பட முன்னர் எவ்வகை உணவை உட்கொள்ளுதல் என்பதை ஆராய்தல் வேண்டும். எங்கள் நாட்டில் உண்டாக்கப் பெறுவனவாய் எமக்குப் பொருத்தமானவையாய் மக்களின பழைய பண்பாட்டுக்குகந்தவையாய் உள்ளவற்றை உட்கொண்டு முன்னேர் ஒழுகிய வழியில் உணவுநெறியில நிற்றல் முக்கியமாகின்றது.

புறநாட்டிலிருந்து தருவிக்கப்படும் உணவுப் பொருட்களை உபயோகப்படுததுவதால் எங்கள் பொருளாதார வலிமை குன்றிவிடும் என்பதை மறந்துவிடுதல்கூடாது. சிக்கனமாக வாழ்ந்து வரச் சிறந்தவழி நாட்டுமுறையிலே வாழ்க்கையை அமைப்பதுதான். நெல், வரகு, குரக்கன், சாமை, தினை, கிழங்கு வகைகள், காய்கனிகள் என்று தமிழகத்திலே பெறக்கூடியவற்றையே உணவாகப் பயன்படுத்துப பழக்கம் சட்டாயமாக வேண்டப்படும தமிழகத்திலே பண்படுத்தப்படாது பயன்படுத்தப்படாது வெற்று நிலமாக இருக்கும் பரப்பையெல்லாம் உணவுப் பொருள் விருத்திச்திக்காக உபயோகித்தல் முதற்கண் அவசியமாகின்றது. புறநாட்டிலிருந்துபெறப்படும் மா வகைகள் வேறு உணவுப் பொருட்களை இந்த இயக்கம் இனிது முடிவடையுமவரைக்கும தமிழகத்தார் உபயோகப்படுத்த வொண்ணுது. தித்திப்புப் பொருளாகிய சீனிக்குப் பதிலாகப் பனங்கட்டி முதலியவற்றைப் பயன்படுத்துதல் பொருளாதாரத்துக்குப் பொருத்தமாவதுடன் தேக நலத்துக்கும தேவையாகின்றது. (வளரும்)

—

## திருக்குறள் மகாநாடு

கொழும்பு தமிழ்மறைக் கழகத்தின் திருககுறள் மகாநாடு வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் வியாழக்கிழமை 24-5-56 தொடங்கி நடைபெறுகின்றது மகாநாடு மூன்று நாட்களுக்கு நடைபெறும். பல அறிஞர்கள் பேசுவார்கள். அவர்களுள் வித்துவான் தி. மூ. இராசக்கண்ணனுர் அவர்கள் எம் ஏ. பி. ஓ. எல். வித்துவான் திரு. ந. சேதுரகுநாதன், சித்தாந்த தினகரன் வித்துவான் மறை திருநாவுக்கரசு ஆகியோர் இந்தியாவிலிருந்து வந்த பெருமக்களாவர்.

முதலாம்நாள் நகரசபைத் தலைவர் திரு. எஸ். எஸ். நவரத்தினம் அவர்கள், வித்துவான் பண்டிதர், திரு. கா. பொ, இரத்தினம் அவர்கள், இரண்டாம்நாள் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் பி. ஏ. கலாநிதி திரு. வ. பொன்னையா பி ஏ. பி. எச். டி. அவர்கள் மூன்றும் நாள் திரு. அ. மா. க. குமாரசுவாமி அவர்கள் பி. எஸ். சி, திரு. ம. ஸ்ரீகாந்தா வடமாகாண அதிபர் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

## தமிழ்நாட்டில் செயற்கை மழை!

உதகமண்டலத்திற்கருகே செயற்கை முறைகளில் மழை பெய்விக்கச் செய்யும் பரிசோதனை நடவடிக்கை வெற்றிபெற்றது. உதகமண்டலத்திலிருந்து 17 ஆவது மைலிலுள்ள முகூர்த்தி என்ற இடத்தில் இப் பரிசோதனை நேற்று நடைபெற்றது. இவ் வட்டாரத்தில் மேகங்கள் தாழ்ந்த உயரத்தில் குவிந்திருந்தன. சுண்ணும்புச் சத்தும், உப்பும் கலந்த பொடி மேகங்களை நோக்கி விஞ்ஞான சாதனங்களின் மூலம் தூவப்பட்டது; பிறகு மூன்று மணி நேரம் கழித்து மழை பெய்தது.

நீர்ப்பாசனத் துறைத் தலைமை அதிகாரியும், செயற்கை மழை பரிசோதனைக் குழுத் தலைவருமாகிய திரு. யூ. ஆனந்தராவ் இப் பரிசோதனையை நடத்தினுர். (தமிழ் நாடு)

# லகெலாம் வாழும் கவிஞன்

## தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுர்

### ண்ட காட்சிகளும் உரைத்த அறன்களும்

இன்று நிலையாமையே
லகில் அடிப்படையான
ண்மையாயிருப்பினும்
லகில் நிலைப்பதற்குரிய
வழியை நம் முன்
ர் தேடினர். "தோன்
ற் புகழொடு தோன்றுக"
ற வீர உணர்ச்சியுடன்
ழ்ச்சிமிக்க பல உண்
ச் வரலாறுகளை இலக்
மாகப் படைத்தனர்.
கள் நன்று வாழ்வதற்கு
ழி காட்டும் பெரும்
ற நூல்களை யாத்தனர்.
களுலே நிலையிலாத் தம்
வுடம்பு காலதேவனுக்கு
ந்தாலும் அழிவிலாத்
புகழ் நிலைக்கச் செய்
ர்.

'மன்னு உலகத்து
மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத்தாம்
மாய்த்தனர்"

என்ற புறப்பாட்டைப்
ட்சிக் கவிஞன் பாரதி
ம்பிடித்துக் காட்டும்
றப்பென்னே. வான்
த்த வையகமெல்லாம்
ள்ளுவன் புகழ் வாழாக்
ண்ட கவிஞன் "வள்ளு
ன் தன்னை உலகினுக்கே
து வான்புகழ் கொண்ட
ழ்நாடு" என வாயார
ழ்த்தினுர்.

இவ்வாறு உலகெலாம்
ழும் கவிஞன் ஒருவன்
ன்ருல் அது தெய்வப் புல
மத் திருவள்ளுவர்தான்
ன்று தமிழ்நாடு மட்டு
ன்றி மேல்நாட்டுக் கவிஞ
ம் பெருமையோடு பேசும்
பாழுது தமிழ் அன்னை
ள்ளங் குளிர்வாள் அல்
வா?

இத்தகைய சிறப்பு வாய்
கவிஞர் தமிழ்நாடாம்
சன்னையிலுள்ள திருமயி
யில் பிறந்து வளர்ந்தா
ன்பதே அன்னுர் காலத்
ல் வாழ்ந்த புலவர்களது
றச் சான்ருகும். இவர்
ன்பத் தமிழ்நாட்டிலே
ணையில்லாத் தமிழ்இனத்
லே, மாட்சி மிக்க தமிழ்
ரபிலே தமிழ் தவழுங்
டியிலே பிறந்தவர். தமி
ச் சுற்ருடலில் தமிழ்ச்
ல்புடன் வளர்ந்தவர்.
மிழ்நாட்டில் எழுந்த நூல்
ள் பலவற்றையும் பயின்ற
வர் வையத்து வாழ்
ங்கு வாழுங்கால் உலகம்
ழ்வதற்கு மூல காரணம்
டவுள் என்பதைக் கண்ட
லன்ருே "கடவுள் முத
றே உலகு" என்றும்,
ழும் மக்கட்கு வானகத்
தக் கொடுத்துத் தானத்
தயும் தவத்தையும் தங்க
வைத்த பெருமை உலகம்
தற்றே பரந்து செறிந்
ள்ள கடவுள் கருணையி
ல் என்ற முடிபை உணர்
த்தினுர் இன்று காலமுறை
ாக வானகம் வழங்காதா
ின் விஞ்ஞானத்தினுல்
மழை வருவிக்கலாம் என்று
பெருமையோடு பேசுவாரு
ரையாயின்! மழையை வரு
வித்துப் பயிரை வளர்த்
தால் பயிர் பருவமாக வளர்
வதற்கும் நெற்கதிர் கக்கு
வதற்கும் அது விளைவதற்
கும் பகலவனது வெப்பம்
வேண்டுமே இவை யெல்
லாவற்றையும் தேவை
நோக்கிக் குறைத்துங் கூட்
டியும் ஆக்க வல்ல ஒரு
அணுச்சக்தி உண்டென்
பதை வள்ளுவர் வலியுறுத்
துகின்ருர். ஆசிரியர்காலத்
திலேயே செயற்கரிய செய்
யும் பெருமக்கள் வாழ்ந்
தார்கள். அவர்கள் மனத்
துக்கண் மாசிலா வாழ்வே
அறமெனக் கொண்டார்
கள். அஃதே இல் வாழ்க்
கையின் பயன் எனக்கண்
டார்கள். இத்தகைய இல்
வாழ்க்கைக்கு அக்காலப்
பெண்கள் எத்துணைச் சிற

---

**திரு. ம. மருதலிங்கம்**
சங்கானை

---

ப்புடையவர்களாக அமைந்
தார்கள். சிறந்த உரிமை
களையும் கடமைகளையும்
காத்து வாழ்க்கைத் துணை
யாகக் கொண்ட கணவனை
யும் வந்த விருந்தினரையும்
பேணி உபசரிப்பதைக்
கண்ட வள்ளுவர் இவளல்
லவோ இல்லாள், மனை
யாள்எனவியந்துரைத்தார்.

"தற்காத்து தற்கொண்டான்
பேணி, தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்
பெண்"

என்று அம் மெல்லியவான்
தரு கற்பினுரின் பழக்க
வழக்கத்தை உலகம் அறிய
ஓர் குறள் அடியில் ஈந்தார்.
இத்தகைய இல்வாழ்க்கை
யின் இனிமையே மழலை
மொழி என்றும் இம்மொழி
செவிப் புகார் குழலும்
யாழும் மகிழும் இன்ப
மென்று பாராட்டுவார்.
இவர்கள் இவ்வாறு குழ
நதை உள்ளத்தோடு வாழ
ந்த மக்கள் அன்பே உரு
வாய் அறமே அருளாய்
வாழ்ந்தார்கள். அவ்வாறு
இல்வாழ்வதெல்லாம் விருந்
தோம்பற் பொருட்டே
என்று உணர்ந்தனர் வீட்
டிற்குப்புதியாராக வருபவர்
களையும்உற்ருர் உறவினரு
மல்லாதவர்களையும் ஒரு
வகையிலும் தொடர்புடைய
வரல்லாதவர்களையும் பண்
டளவுண்மையிலன்று கண்
டறிவுண்மையினல்லா தா
ரையும் அதிதிகளையும் நாள்
தோறும்ஆதரித்து விருந்து
உவந்த தன்மை வள்ளுவன்
வாழ்ந்த தமிழ்நாட்டிற்குண்
டாயின் நாம் அதற்குப்
புறநடையாகவா? ஆதலினு
லன்ருே வள்ளுவர்,

"வருவிருந்து வைகலும் ஓம்பு
வான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"
என வள்ளுவர் விருந்தின்
சிர்மையை உலகமறிய எடு
த்தியம்பினுர். இக்கால மக்
கள் பொன்னுல் தம்மை
அழகுபடுத்தப் பழகிக்கொ
ண்டனர். பொருளால் தம்
மைப் போற்றிக் கொண்ட
னர். போகத்தால் புவியில்
இன்பத்தைத் துய்த்தனர்.
ஆனுல், வள்ளுவர்காலத்தில்
வாழ்ந்த தமிழ் மக்கள்
"பணிவுடையான் கண் இன்
சொல்லே அணி" என அவ்
வழி கொண்டு நல்வழியில்
அழகுபட வாழ்ந்தார்கள்.
வையகம் அவர்களை வானு
றையும் தெய்வமென மதித்
தது. இத்தகைய வாழ்க்
கையில் வள்ளுவர் கூறி
யாங்கு வாழ்வாங்கு வாழ்
ந்து காட்டிய உத்தமர்
மகாத்மாவை அன்றும்
இன்றும் உலகம் அவரை,
வையகத்தில் வாழ்ந்த தெய்
வம் எனப் போற்றும் பெற்
றியென்றே அன்னுர் வாழ்
ந்து காட்டிய வாழ்க்கை
ஒழுக்கம் என்றும அழி
யாது வாழக் காண்கின்
ருேம். இனி வள்ளுவர்
கண்ட மக்கள் மிக்க பண்பு
வாய்ந்தவர்கள். அவர்கள்
செய் நன்றி மறவாச் செம்
மையாளர். சமம் செய்து
சீர்தூக்குங் கோல் அன்
னுர் உள்ளம் அடக்கமும்
ஆய்வும் ஒழுக்கமும் நிறை
ந்த ஆண்மையுடையவர்கள்
ஆனுல் இக்கால மக்களைப்
போல் மதுவுண்டு ஆண்
மை பேசும்தன்மையதல்ல,
"பிறன்மனை நோக்காததே
பேராண்மை கொண்டு
பெருமையோடு வாழ்ந்தார்
கள். பொறையே அப்
பெருமையாளரது நிறை
வாக வாழ்ந்தது. அழுக்கா
றில்லா அன்னுர் தூய்மை
உள்ளம் பிறர் பொருளைக்
கவரவோ பிறர் பொருளிற்
பற்றுக் கோடவோ அற்ற
வர்களாய்ப் பிறரை உள்
ளத்தினுற்கூடக்களவாடாத
ஆண்மையும் அவர்களிட
த்து மிக்கிருந்தது. மறந்
தும் பிறன் கேடு சூழல்
ஆகும். ஆதலால் அவர்
கள் பயனில் சொல் செல
விடாப் பண்புடையாளர்.
அன்னுர் கொடைப் பழக்
கத்தை வள்ளுவர் கண்டு
காமுற்ருர். இஃதன்ருே
கொடை என வியந்து பர
ந்த பண்பைப் பாராட்டும்
சிறப்பென்னே மக்களது
செல்வமானது பயன் மரம்
உள்ளூர்ப் பழுத்தான்போ
லவும், ஊருணி நீர் நிறைந்
தான் போலவும் உதவிய
பெருமை என்னே! இத்
தகைய மக்கள் இறப்பதே
இனிதாக விரும்பினுர்கள்
என்று வள்ளுவர் சொல்
வது வியப்பான சம்பவமா
கும்.

---

# வான நிலை கணித்து மழை வளம் மதித்தல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ரத்தில் இருவரும் கூடுவார்
கள். அப்பொழுது உண்
டாகும் விளைவுகளை நாம்
காணக்கூடியதா யிருக்கக்
கூடும்.

வெள்ளி தெற்கே போ
கின் மழைகுறைவதுபோல்,
சனி புகைதலும், ஏரிமீன்
விழ்தலும், தூமம் (வால்
நட்சத்திரம்) தோன்றுவ
தும் சூரியன் பல திசைக
ளில்தோன்றுவதுபோன்ற
அறிகுறிகளும் தீங்கு விளை
வதற்கு ஏதுவாகும் என்ப
தைப் பழந்தமிழ் மக்கள்
அறிந்திருந்தனர்.

"அலங்கு கதிர்க் கனலி
நால்வாயின் தோன்றினும்
இலங்கு கதிர்வெள்ளி
தென்புலம் படரினும்"
(புறம் 35

(அலங்கு கதிர்க்கனலி
நால்வாயின் தோன்றினும்
—ஞாயிறு நால்திசையிற்
ருேன்றினும்)

"தெறு கதிர்க் கனலி
தென்திசைத் தோன்றினும்
என்னென் றஞ்சலம் யமே"
(புறம் 387)

'எரி தோன்றினும்
குளமீனெடு தாள் புகையி
னும்"
(புறம் 395)

"திசையிரு நான்கும்
உற்கம் உற்கவும
பெருமரத்திலையினெடுங்கோடு
வற்றல் பற்றவும்
வெங்கதிர்க கனலி
துற்றவும் பிறவும்
அஞ்சு வரதத குரு
புள்ளுக் குரலியம்பவும்
... ... ... ... ... ... ... ... ..."
(புறம் 4 )

(உற்கம்-எரிகொள்ளி, ஏரி
மீன், எட்டுத் திசையிலும்
ஏரிமீன்விழுதலும், ஞாயிறு
பலவிடத்தும் தோன்றலும்
தீயவிளைவுக்கு ஏதுவாகும்).
கூடலூாக்கிழார் என்ப
வர் ஒரு சிறந்த புலவர்.
பங்குனித் திங்களில் விண்
மீன் ஒன்று எரிந்து விழுந்
ததென்றும் அதன் ஏழாம்
நாள் ஓர் அரசன் (கோச்
சேரமான் யானைக்கட்சேய்
மாந்தரஞ் சேரலிரும்
பொறை இறப்பானென
அஞ்சினுர். அவர் கூறிய
படியே நடந்தது.

"ஆடியல் அழற்குட்டத்து
ஆரிருள் அரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயம்காயப்
பங்குனி உயர் அழுவத்துத்
தலை நாண்மீன் நிலைதிரிய
நிலை நாண்மீன் அவன்எதிர்
ஏர்தரத்
தொன்னுன்மீன் துறைபடியப்
பாசிச் செல்லாது ஊசிமுன்
னுது
அளக்கர்த்திணை விளக்காகக்
கனைஎரிபரப்பக் கால்
எதிர்ப்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்ருல்
விசும்பினுனே
அதுகண்டியாமும் பிறரும்
பல்வறிரவலர்
பறையாசையாருவி
நன்னுட்டுப் பொருநன்,
நோயிலனுயினன்று
மற்றில்லென அழிந்த
நெஞ்சை மடியுளம் பரப்ப
அஞ்சின மெழுநாள்
வந்தன்றின்றே"

(புறம் 229)

இது கூடலூர்க்கிழார்
பாடிய பாடல். "மேடராசி
பொருந்திய கார்த்திகை
நாலின் முதற்காலின் கண்
நிறைந்த இருளையுடைய
பாதியிரவின்கண் முடப்
பனைபோலும் வடிவினையு
டைய அனுடநாளின் அடி
யின் வெள்ளி முதலாகக்
கயமாகிய குளவடிவுபோ
லும் வடிவையுடைய புனர்
பூசத்துக்கடையின்வெள்ளி
எல்லையாக விளங்கப் பங்
குனி மாதத்தினது முதற்
பதினைந்தின்கண் உச்சமா
கிய உத்திரம் அவ்வுச்சியி
னின்றும் சாய அதற்கெட்
டா மீனுகிய மூலம் அதற்
கெதிரே எழா நிற்க அந்த
உத்திரத்திற்கு முன் செல்
லப்பட்ட எட்டி மீனுகிய
மிருகசீரிடம்துரையிடத்தே
தாழக் கீழ்த்திசையிற்
போகாது வட திசையிற்
போகாது கடலாற் சூழப்
பட்ட பூமிக்கு விளககாக
முழங்கா நின்ற தீப் பரக்
கக் காற்ருற் பிதிர்ந்து
கிளர்ந்து ஒரு மீன் வீழ்ந்
தது வானத்தினின்றும்"
என்று உரையாசிரியர்
உரை எழுதியுள்ளார். (உத்
திரத்திற்கு எட்டாம் மீன்
மூலம். பங்குனித் திங்கள்
கார்த்திகை நட்சத்திரம்
நிகழும்போது சட்டி அல்
ல[illegible] சத்தமித் திதியாக
இருக்கும். ஆதலால் பாதி
யிரவில் இருள் நிறைந்ததா
கவே யிருக்கும். பங்குனி
15ம் நாள பாதியிரவில் உத்
திரம் உச்சத்தினின்றும்
சாய மூலம் உதயமாகும்.
மிருக சீரிடம் அத்தமனம
டையும். இது பொருத்த
மாகவே யிருக்கிறது. அதா
வது பங்குனித் திங்கள்
முதற் பதினைந்தில் கார்த்
திகைநாள் நிறைந்த இருள்
நிறைந்த பாதியிரவில, உச்
சியினின்றும் உத்திரம்
சாய மூலம் உதயமாக,
மிருகசீரிடம் அத்தமன
மடைய ஒருமீன் வடக்கும்
கிழக்கும் செல்லாது இடை
நடுவில்எரிந்துவீழ்ந்ததுஎன்
பதே கருத்தாகும். அதற்கு
ஏழாம்நாள் அரசன் இறந்
தான். தூய தமிழில் வான
நூற்கருத்துக்களைக் கூறிய
திறமை போற்றத்தக்கது.
வானநூற்கருத்துக்கள் அந்
நாளில்விளங்கப்பெற்றிருந்
தமைக்கு இச் செய்யுள்
ஓர் சிறந்த சான்ருகும்.
(இன்றும் வெள்ளி விழு
வான் என்று திட்டுவதும்
வழககாயிருக்கிறது.)

(வளரும்)

---

**புத்த ஜயந்தி துக்க நாளாக்கத் தீர்மானம்**

வல்லு வெட்டித் துறைப்
பட்டினசங்க விசேடகூட்ட
மொன்றில் புத்த ஜயந்தி
பற்றிய பிரேரணை ஒன்று
ஏகமனதாக ஏற்றுக்கொள்
ளப்பட்டது. புத்த ஜயந்தி
விழாவில் எவ்வாற்ருனும்
பங்குபற்ருது அந் நாள்
துக்க நாளாகக் கொண்டா
டப்படுதல் வேண்டுமென்
பது அப் பிரேரணை கேட்
டுக்கொள்வதாகும்,

# வான நிலை கணித்து மழை வளம் மதித்தல்

————0—0————

1-ம் பக்கத் தொடர்ச்சி

"மைமீன் புகையினும்
தூமம் தோன்றினும்
தென்றிறை மருங்கில் வெள்ளி
யோடினும்"
புறம் 117,

'வைகல் வரும் மீன்
பிறழினும்"
— மதுரைக் காஞ்சி 108

என்பவை வெள்ளி தெற்கே முன் மழையில்லை என்பதைக் குறிக்கிறது. வடக்கே வெள்ளி நிற்கின் மழை பெய்யும்.

'வயங்கு கதிர் விரிந்து
வானகஞ் சுடர்வர
வறிது வடக்கிறைஞ்சிய
சீர்சால் வெள்ளி"
— பதிற்றுப்பத்து 3 ம்
பத்து 24ம் பாடல்

"நிலம் பயம்பொழிய
சுடர் சினந்தணியப்
பயங்கெழு வெள்ளி
யாகிய நிற்ப"
—பதிற்றுப்பத்து 7ம் பத்துப்
பாடல் 69

வெள்ளி தெற்கேதோன்றி மழை வளம் குன்றிப் பஞ்சம் வந்த போதிலும் தவறாமற் காவிரி பாயும் பெருமை வாய்ந்தது சோழநாடு என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகாற் பெரு வளத்தானைப் புகழ்கின்றார்.

"வசையில் புகழ் வியங்கு
வெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய
தளியுணவிற் புட்டேம்பப்
புயன்மாறி
வான் பொய்ப் பினுந் தான்
பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி......"
(பட்டினப்பாலை 1—6)

சாத்தனாரும், மணிமேகலையில் கோள் நிலை மாறி மழை குறைந்த போதும் தன்னிலை மாறாக் கா[illegible]ரியை,

"கோள்நிலை திரிந்து
கோடை நீடினும்
தன்னிலை மாறாத்
தண்டமிழ்ப் பாவை"

என்று கூறுகிறார். வெள்ளியோடு சேய்சேரில் மழை குறையுமென்று சோதிட நூல்கள் கூறும். பதிற்றுப் பத்து 2-ம் பத்தில்

"அழல் சென்ற மருங்கில்
வெள்ளியோடாது
மழைவேண்டும் புலத்து
மாரிநிற்ப"

என்று கூறப்படுகிறது. (அழல்-சேய், செவ்வாய் (Mars) சிலப்பதிகாரத்தில்,

"கரியவன் புகையினும்
புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம்
படரினும்"
(சிலப்பு 10: 102-103

[கரியவன் புகையினும் - சனி புகைந்தாலும் (பகை வீடுகளிற் சென்று மாறுபட்டாலும்) புகைக்கொடி தோன்றினும்— தூமகேது தோன்றினாலும் (வட்டம், சிலை, நுட்பம். தூமம் என்னும் கரந்துறை கோட்கள் நான்கினுள் ஒன்று], விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும் — விரிந்த கதிரினையுடைய வெள்ளி தெற்கின்கண் செல்லினும்] கரியவன்புகைதல்—சனிமாறுபடுதல் — வக்கிரமடைதல், மேடம், இடபம், சிங்கம், மீனம், தனுசு என்னும் இராசிகளோடு மாறுபட்டால்தீங்குண்டாகும். சனிக்குப் பகைவன் ஞாயிறு. ஞாயிறு. ஞாயிற்றின் இல்லமாகிய சிங்கவிராசியில் வக்கிரமடைந்தால் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்பான். மகம் சிங்கவிராசியைக் கொண்டது. சனி சிங்கத்தில் வரும் காலம் பெருந்தீங்கு உண்டாகும். சான்றாக,

"மகத்திற் பக்கதோர்
சனியெனக்காணுய்"

— திருவொற்றியூர் சுந்தரர்
தேவாரப் பதிகம் 9

"அடையார் தமக்கு
மகத்திற் சனியன்ன"
தஞ்சை வா கோவை 48)

"விசயன் றம் முற்குதவி
செய்யாமன் மகத்திற் சனி
போல் வளைக்குவம் யாம்"

— வில்லி பா 11ம் போர்
சரு. 40)

"மகத்தில் வாழ் சனியா
[யினை
(வாயு சங் கடவுள் 7)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேடம், இடபம், சிங்கம், மீனம், தனுசு என்னும் இராசிகளில் சனி நின்று, வியாழன், இராகு. சேய் இவர்களோடு கூடினும், சனியும் சேயும் கூடி மேற்கூறிய இடங்களில் வக்கரிப்பினும் சனியும் வியாழனும்கூடி வக்கரிப்பினும் அல்லது சனி, இராகு, வியாழன், சேய் இந்நால்வரும் ஒருங்கே கூடினும் கேடுண்டாகும் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை சனி, வியாழன் என்னும் கோள்களுகருத் தேசாந்தரரேகை ஒன்றாகவிருக்கும். அப்பொழுது இருவரும் ஒரே இராசியில் இருப்பார்கள். இது உலகிற்குப் பெருந் தீங்கு விளைவிக்கும். 1861-ம் ஆண்டு சனியும் வியாழனும் கூடிய பொழுது அமெரிக்க உள்நாட்டுச் சண்டையும், அதன்பின் இலிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகியதும் நடைபெற்றது. 1881ம் ஆண்டு இவ்விருகோள்களும் மேடவிராசியிற் கூடினர். அந்நாளில் செர்மன் அரசு (German Empire) திருத்தியமைக்கப்பட்டது. உருசியத் தலைவர் அலக்சாண்டரும் (Czar Alexander அமெரிக்கத் தலைவர் கார்பீல்டும் (Garfield கொலை செய்யப்பட்டார்கள். 1901ம் ஆண்டு இவ்விருவரும் மகரராசியில் கூடியபொழுது விக்டோரியா மகாராணி இறந்தார். அமெரிக்கத் தலைவர் மக்கின்லி (Mckinly) கொலை செய்யப்பட்டார். 1921-ம் ஆண்டு கன்னி இராசியில் இருவரும் கூடிய பொழுது இத்தாலியில் பாசிஸ்டு இயக்கம் (Fascist movement) தொடங்கியது. ஆங்கிலேயரோடு மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். அல்லாமலும் உருசியாவில் நடைபெற்ற பஞ்சமும், உருசியப்புரட்சி புதுமுறையாகத் திரும்பியதும், போர்த்துக்கல்லில் ஜனாதிபதி பேஸ் (President Paes) கொல்லப்பட்டதும் இக்காலத்திலேதான். 1941-ம் ஆண்டு இருகோள்களும் மேட இடப இராசிகளிற் கூடின. அந்நாளில் நடைபெற்ற இரண்டாம் உலக யுத்தமும் கிட்லரின் வீழ்ச்சியும் யாவரும் அறிந்ததே. வருகிற 1961-ம் ஆண்டு மக

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### கோட்டு விற்பனவுத் தேதித் திருத்தம்

11-5-56ல் வெளிவந்த இந்து சாதன இதழில் 5ம் பக்கத்திலுள்ள 11906ம் இலக்க வழக்குக் கோட்டு விற்பனவின் கீழ் 1956௵ ஆனி மீ 1௳ வியாழக்கிழமை என வாசிக்க இடம் கொடுத்திருக்கும் திகதி 1956௵ ஆனி மீ 14௳ வியாழக்கிழமை என்று திருத்தி வாசிக்கப்படுதல் வேண்டும்.

—O—

### கோவா சுதந்திரத்திற்குப் போர்த்துக்கேய ஆதரவு

பத்து வருடங்களுக்கு முன்பு கோவாவிலிருந்து போர்த்துக்கல்லுக்கு நாடுகடத்திச் சிறையிலிடப்பட்ட கலாநிதி இராமஹெட்ச்பேராசிரியர் புருஷோத்தம் காக்கோட்கார் ஆகிய இரு தலைவர்கள் தங்கள் சிறைக்காலம் முடிந்து கோவாவுக்குத் திரும்பினர்கள். அவர்களுள் கலாநிதி ஹெட்ச போர்த்துக்கேய மக்களின மனநிலைமை பற்றி தமது கருத்தைத் தெரிவிக்கும்போது அவர்கள் கோவா மக்களின் சுதந்திரத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றார்களென்று கூறினர். அதிகாரத்திலுள்ள ஒரு சிலரின் கொடுமையே இப்பொழுதுள்ள நிகழ்ச்சிகளுக்குள்ள காரணமாக அவருடைய கூற்று குறிப்பிட்டது.

### கலாநிதி பெறெருவுக் அறைகூவல்

மஸ்கேலியாப் பிரதி ஸ்ரீ எஸ், ஜினதாச புவ பிட்டியாவில் பேசும்போ தம்து பதவியைத் துற மொழிக்கொள்கையில் முடன் மீட்டும் போட் டும்படி கலாநிதி என். பெறெருவை அறைகூ அழைத்திருக்கின்றார்.

### ஈழத் தமிழர்பற்றி இந்திய அறிஞர்

ஈழ நாட்டில் தமிழ்மொ யின் நிலைமை தமிழ்மக்க நிலைமை என்பவைபற் பேராசிரியர் திருமண திருநாவுக்கரசு அவர்க தமது கருத்தைத் தெரிவி கும்போது இந் நாட்டி தமிழ்மக்கள் குடியேறி வர்களல்லலர் என்ப ஆராய்ச்சித் துணிபு எ றும் சிங்களமக்களே கு யேறியவர்கள் என்று குறிப்பிட்டு, தமிழ்ச் சமுக துக்கு அழிவே முன் வ தாலும் தமிழ் மொழி யும் தமிழ்க்கலாசாரத் யும் தமிழ் மக்கள் பா காக்க வேண்டுமென் கூறினாராம்.

# வீரமகேந்திரன் வியப்புறுதோற்ற[ம்]

————:o:————

## சூரபன்மனது ஆட்சிக் கொடுமை

சூரபன்மன் அரசுவீற்றிருந்த நகரம் வீரமகேந்திரம் எனப் பெயர்பெறும். யாவரையும் வென்றபின் அந்நகரத்தில் அரசு வீற்றிருந்தமையின் அது அப்பெயர் பெற்றது. "தன்னிகரிலவுணர்பிரான் சயத்தோடு பெருந்தலைமை — மன்னவருதலின் வீரமகேந்திரமேயாமென்றே" என்பது கச்சியப்பரின் வாக்கு.

அறுமுகப் பெருமானின் ஆஞ்ஞைப்படி தூது சென்ற வீரவாகுதேவர், அந்த நகரின் அழகுகளைச் சிறிது நேரம் நோக்கினர். எவ்வளவு வீதிகள், எவ்வளவு யானைகள், எவ்வளவு குதிரைகள், இவைகளைக் கணக்கிட முடியாது போலிருக்கின்றது எனக் கருதுகிறார். யானையினது மதநீரும், குதிரையின் வாயிலிருந்து வருகின்ற விலாழி என்கின்ற நீரும் சேர்ந்து பெரிய ஆறாகி பெண்கள் அணிந்து நீத்த மாலைகளையும் பிறவற்றையும் கொண்டு கடலிற்பாயுமென்றால் குதிரைகளினதும் யானைகளினதும் தொகையைக் கூறமுடியுமா?" என வீரவாகுதேவர் கருதுகின்றார். தென்றற் காற்றானது குளிர்ச்சி பொருந்தியதால் சோலையிலுள்ள மலர்களின் நறுமணத்தைத தன்னகத்தே கொண்டு அசுரர் வசிக்கும் மாளிகைகளில் மதுவுண்டவர்கள் அசைந்து செல்லும் தன்மைபோல மெல்ல மெல்ல அசைந்து வரும்.

அந்த நகரத்திலேஉள்ள சிறுவர் தேருருட்டி விளையாடுவர். மான்குட்டிகளைக் குதிரைக்குப் பதிலாகப் பூட்டுவர். தேரின் சில்லுகளிலே உள்ள பொன்னை மணிகளினாலே ஆக்கப்பட்ட நிலம் ஆசையினாலே கவர்ந்து கொள்கிறது. அங்கே உள்ள செல்வங்களை மயக்கத்தையுடைய மனிதர் மாத்திரமல்ல முனிவரும் விரும்புவார்கள்.

வீரமகேந்திர புரத்தில் கல்விச்சாலைகள் இருந்தன, ஆசிரியர்வர அவருக்குப் பின்னே சிறுவர்கள் பாடசாலைக்கு வந்து சேர்ந்தார்

ஸ்ரீ வ. குகசர்மா

கள். மாலைக்காலத்தில் சந்திரன் தோன்றஅதன்பின் தோன்றும் நட்சத்திரக் கூட்டங்களை இக்காட்சி நினைவூட்டுகின்றது. சாதாரண கல்வி கற்போருடன் வாட் போர் பயில்வோர், விற் போர் பயில்வோர், மற்போர் மயில்போர் ஆகியோரும் காணப்படுகின்றனர்

அந்நகரிலே முகில்படியும் உயர்ந்த மாடங்கள் உண்டு. அந்த மாடங்களிலே நின்றும் சிறுவர்கள் வெண்மை நிறமுள்ள மலர்களாற்றொடுத்த மாலைகளைக் கையிலே எடுத்து மேலே எறிகிறார்கள். அவை திரும்பவும் பூமியை நோக்கி வருகின்றன. ஆகாயத்தில் உள்ள சூரிய சந்திரர்கள் தம்மிடத்தை விட்டு வழுக்கி விழுகின்ற தன்மை போல[illegible] றிருக்கின்றது இக்காட்சி.

வீரம், புகழ், செல்வம் மு[illegible] லியவற்றை யாகம் செய்யு[illegible] யாகசாலைகள் பல உண்[டு] நடன அரங்குகள் ப[illegible] வுண்டு. பலவித மங்க[illegible] வாத்தியங்களின் ஓசையு[ம்] எந்தநேரமும் கேட்கு[ம்] பொதுவாகக் கூறுகில் அ[ந்] நகரில் எல்லாச் செல்வமு[ம்] பொருந்தியிருந்தன.

அங்கேஇல்லாதபொருள்களும் சிலவுள என வீ[ர] வாகுதேவர் கவனித்து கூறியுள்ளார் "தசைவாடி மூப்புவந்து மயிர் நரைத்[து] நோயினால் வாடுகின்றவர்களையும், வறுமையால் வாடு[கி]ன்றவர்களையும் இறக்கின்றவர்களையும் காணவில்லை தவவலிமைதான் இதற்கு[க்] காரணம் எனக் கருது[கி]றார். வேறும் இரு பொருட்களைக் காணவில்லை. அவற்றைச் சூரன் சிறைவைத்[தி]ருக்கலாமோ எனச் சிந்தி[க்]கிறார்.

"தரும மெய்யவி கண்டில
கண்டில மவற்றையுந்
தந்து
சுரர்கள் தம்முடன்
சிறையிலிட்டாங்
கொலோ சூரன்"

இராவணன் ஆண்ட இலங்கையைக் கண்டவுடன் இச்சிந்தனைதான் அநுமா[ன்] மனதிலு முண்டாகின்றது. என்ன சிறப்புக்கள் பொரு[ந்]திருந்தாலும் கொடுங்கோல்மன்னன் சூரன் என்பதை இச்செய்யுள் சொல்லாமற் சொல்லி விடுகின்றது.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 27—5—56 —— 2—6—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, 1ம் பாதம். கார்த்திகை முதற்கால்.

மெதுவான ஆனல் திடமான முன்னேற்றம் இந்தவாரம் நிச்சயம். புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரும். ஆனல் குடும்பச் சூழலில் சில குழப்பங்களுக்கிட முண்டு. சுகவீனங்களுககு மிட முண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்தவாரம் இனத்தவர் மூலம் இடைஞ்சல்களுக் கிட முண்டு. முதல் இரு நாட்களும் தொந்தரவானவையா யிருக்கும். உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. நடுவாரத்தின்பின் சில திருத்தங்களுக்கிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

முதல் இருநாட்களும் ஒருஅளவுக்குக் குற்றமில்லாம லிக்கும். செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி காலை கவனமாய்க் கழிக்கவேண்டும். மிகுதிவாரம் புதுக் கருமங்களுக்கு நன்ருயிருக்கும். ஆனல் மனச்சமாதான மிருக்க மாட்டாது.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

முன் அரைவாரத்தில் தனலாபமும் பொதுச்சித்தியும் நிச்சயம் வியாழன் பிற்பகல் வெள்ளி சனி நல்லா யிருக்கமாட்டா. சித்தி பெறுதற்கு நீர் மிக முயன்றுழைக்க வேண்டும்.

**சிங்கராசி** மகம், உத்திரம், பூரம் 1ம் பாதம்.

இந்தவாரம் உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை வெல்லககூடியதாயிருக்கும். புகழும் வழக்கில் வெற்றியும் நிச்சயம். வாரத்தின் இறுதி நாளில் சண்டைகளைத தவிர்க்கவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் வேலை கூடுதலாயிருப்பதோடு மற்றவர்களுடைய கருமங்கள்பற்று நீர் துன்பமும் அனுபவிப்பீர். இந்தவாரம் ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். வார இறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இந்தவாரம் உம்முடையமுயற்சிகளில் நீர் சித்தியடையக் கூடியதாயிருக்கும், ஆனல் ஆரம்ப இடையூறுகளால் மனந்தளர வேண்டாம். தன லாபம் நிச்சயம். ஆனல் சிறிதும் மிச்சம் பண்ணமாட்டீர்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் சண்டைகளுக்கும் இந்தவாரம் இடமுண்டு. நீர் முயன்று வேலை செய்யவேண்டும். சுகவீனங்களுக்கிடமுண்டு. வார இறுதியில் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்கராடம் 1ம் பாதம்.

துன்பங்கள் தொந்தரவுகளிலிருந்து இந்தவாரம் நீங்குதல் நிச்சயம். உம்முடன் போட்டியிடுவோரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். தேகசுகம் திருந்த வேண்டும். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. உமக்கு மனச் சமாதானமிருக்க மாட்டாது. வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். ஒன்றையும் புதிதாய்த் தொடங்கவும்வேண்டாம்

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

ஒரு நல்லவாரம். பொதுவிருத்தியும் புது முயற்சிகளில் இலாபமும் நிச்சயம்- நீர் இடைஞ்சல்களிலிருந்து நீங்கக்கூடியதா யிருக்கும். பெருமையும் புகழும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இந்தவாரம் பெண்ணின நண்பரால் தொந்தரவுகளுக்கிடமுண்டு குடும்பக் குழப்பங்களுக் கிடமுண்டு. தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்க மாட்டாது. அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாய் இருக்கவும்.

# திருமண அழைப்பு

## விசுவநாதன் — தவமணி

வண்ணை வைத்திய கலாநிதி திரு. கே. இராசா அவர்களின் புத்திரன் வழக்கறிஞர் திரு. இ. **விசுவநாதன்** அவர்களுக்கும் மலாயா உத்தியோகத்தரா யிருந்து இளைப்பாறுகின்ற 33-ம் இலக்கம் நல்லூர் செட்டித்தெரு திரு. சி. கந்தையா அவர்களின் புததிரி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிஆசிரியை ஸ்ரீமதி **தவமணி அம்மாள்** அவர்களுக்கும் இந்த மாசம் 26-ந் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழும். அடுத்தநாள் மாலை 5 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் மணமகனில்லத்தில் வரவேற்பு நிகழும்.

சுற்றமித்திரர் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனி அழைப்பு அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடப்படுகின்றது. (M 290)

### ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்

—

**பண்டித பரீட்சை 1956**

**இரண்டாம் பகுதி**

கீழ்க் குறிக்கப்படும் இரு பரீட்சார்த்திகளும் 1954-ம் ஆண்டு சங்கம் நடத்திய பண்டித பரீட்சையில் முதலாம் பகுதியிற் சித்தி பெற்று இப்போது இரண்டாம் பகுதியிலும் சித்தி பெற்றுள்ளனர்.

1. திரு. சி. சரவணமுத்து சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.
2. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, குளயக்கால் மல்லாகம்.

### தேகவியோகம்

யாழ்ப்பாணப் பகுதி விவாகப் பதிவுகாரராகிய வண்ணார்பண்ணை திரு சி. பசுபதிச் செட்டியாரின் கனிஷ்ட புதல்வனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவனுமாகிய திரு. ப. செந்திநாதன் சென்ற சனிக்கிழமையிரவு திடீரென ஏற்பட்ட நோயின் காரணமாக அகால மரணமடைந்தார் என்பதை ஈண்டு குறிப்பிட வருத்தப்படுகிருேம். வழமைபோல் சென்ற வெள்ளிக்கிழமை பாடசாலை சென்று திரும்பிய செந்திநாதன் சனிக்கிழமை மாலை வரை உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும இருந்து பின் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அமைதியாக நள்ளிரவில் காலமானுர்.

அன்னரது ஆத்மா என்றென்றும திருச்செந்தில் ஆண்டவனின் பாதகமலங்களில் சேர்ந்திருக்க நாம் பிரார்த்திக்கிருேம்.

# தனிச் சிங்களச் சட்டத்திற்கு தமிழகம் எங்கும் எதிர்ப்பு

1ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்க மேற்சபை அங்கத்தவர் ஜனப் ஏ. எம். ஏ. அஸீஸ் பிரேரித்து, ஜனப் எம். ஏ. சி எம். சாலி அநுவதித்து நிறைவேற்றப்பட்டது.

**மானிப்பாயில்**

"தமிழ் பேசும் மக்கள் சிங்களத்தை மட்டும் அரச கருமமொழியாக ஏற்றுக் கொள்வர் என மகமள் ஐக்கிய முன்னணி அரசாங்கம தவருக எண்ணிக் கொண்டிருக்கிறது தமிழர்கள் என்றும் நேர்மையுடன் நடந்துகொள்வார்கள். ஓரளவுக்கு அவர்கள் பிறரின் நலனை உத்தேசித்து விட்டுக்கொடுப்பார்கள். ஆனல் தங்கள் மதம், மொழி ஆகியவற்றில் பிறர் கை வைப்பதை அவர்கள் ஒருபொழுதும் பொறுக்க மாட்டார்கள்" என்று மானிப்பாய்த் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தின் ஆதரவில் நடந்த கூட்டத் தலைமையுரையில் வழக்கறிஞர் திருநாவுக்கரசு கூறினர்.

தமிழ்மக்கள் தங்கள் கௌரவத்திக்கும் கண்ணியத்துக்கும் எவ்வித பங்கமுமேற்படாத வகையில் இந்நாட்டில் தொடர்ந்து வசித்து வருவார்கள். நாட்டை விட்டு வெளியேறும் யோசனையை நான் ஆதரிக்கமாட்டேன். 1915-ம் ஆண்டு இலங்கையிற் பெரும் கலகம் ஏற்பட்ட காலத்தில் சேர் பொன். இராமநாதன் என்னும் தலைவர் சிங்களச் சகோதரர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காகப் போராடினர்.

ஆனல் இன்றைய சிங்கள அரசியல் வாதிகள் அதனையும் இந்நாட்டின் நல்வாழ்விற்காகக் காலந்தோறும் தமிழ் மக்கள் பட்ட அரும்பாடுகளையும் அடியோடு மறந்துவிட்டனர் என்று வழக்கறிஞர் திரு. எஸ். இராசேந்திரம கூறினர்.

**கட்டுடை**

"சனநாயகம் என்ருல் பெரும்பான்மைக் கட்சியினருக்கு மட்டும் பாதுகாப்பளித்து சிறுபான்மைக் கட்சியினரையெல்லாம் நசுக்கி ஒழித்துக் கட்டுவதென்பது பொருளல்ல. சிறுபான்மைக் கட்சியினரின் அதிலும் விசேஷமாகத் தமிழ்பேசும மக்களின் மூலாதார உரிமைகளை அரசாங்கம மறுக்கவேண்டிய அவசியமென்ன? இது அரசாங்கத்தின் கண்ணியக்குறைவான போக்கைத்தான் காட்டும்" என்று கட்டுடை சைவ வித்தியாசாலையில் சென்ற வெள்ளிக்கிழமை கிராமாபிவிருத்திச் சங்கத்தினதும் பெற்ருர் ஆசிரிய சங்கத்தினதும் ஆதரவில் கூட்டப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் பண்டிதர் கே. சுப்பிரமணியம் கூறினர்.

பின் வரும் தீர்மானங்கள் அக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) இலங்கைப் பிரசைகள் அனைவர்க்குமே சுதந்திரம் பொதுவில் வழங்கப்பட்டதேயொழியப் பெரும்பான்மையினருக்கு மட்டும் வழங்கப்படவில்லை எனவே சிறுபான்மைக் கட்சியினரின் மூலாதார உரிமைகள் யாவும் எப்பொழுதும் பாதுகாக்கப்படல் வேண்டுமென இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) சிறுபான்மைக் கட்சியினர் தலையில் சிங்களத்தை வலியத் திணிப்பது, சனநாயகக் கொள்கைகளுக்கு முற்றும் முரணுனது மட்டுமல்ல, சிறுபான்மைக் கட்சியினரின் உரிமைகளை மறுப்பதுமாகும் என இக் கூட்டம் கருதுகிறது.

(3) இலங்கை முழுவதிலும் சிங்களத்துக்கும் தமிழுக்கும சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென இக் கூட்டம் தீர்மானிக்கின்றது.

(4) புராதன காலந்தொட்டே இந்த இலங்கையில் தமிழ் சிங்களம் என்னும் இவ்விரண்டு மொழிகளும் வழங்கி வந்தமையினுலும் எங்கள் சனநாயகவாழ்வினைப் பாதுகாக்கவும் ஐக்கிய இலங்கையினை உருவாக்கவும் சிங்களததிற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிப்பதைத் தவிர வேறு வழியில்லையென இக்கூட்டம் தீர்மானிக்கிறது

**அச்சுவேலி**

எல்லாத் தேசியத்துறைகளிலும் மக்கள் முன்னணி அரசாங்கம் நீதியைக் கையாளுட என்று எதிர்பார்த்திருந்த சிறுபான்மைச் சமூகத்தினர் பாஷைப்பிரச்சினை சம்பந்தமாய் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தமிழர், முஸ்லிம்கள் பறங்கிக்காரர் ஆகியோரின் அடிப்படையான உரிமைகளைத் தற்போதைய அரசாங்க வழங்காதுவிடக் கங்கணங் கட்டியிருக்கிறதுபோல்காணப்படுகிறது, தமிழராகிய நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் இன்றியமையாத கடமையை நன்குணர்ந்து எமது கடிதப் போக்குவரத்தையெல்லாம் தமிழில் மட்டுமே நடத்துவது முறையானதாகும். எங்கள் அன்னை மொழிக்கு நாம துரோகஞ்செய்ய உடன்படுவது தர்மமல்ல ஆனல் அரசாங்க அலுவலகங்களுடன் முன்போல ஆங்கிலத்திலேயே கடிதத் தொடர்பு வைத்திருப்பது சாலச் சிறந்தது என்று அச்சுவேலி ஸ்ரீவிக்னேஸ்வர சனசமூக நிலையத்தில் ஏழாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திரு. ஏ கே. கந்தையா பேசுகையில் கூறினர்.

———

### அளவெட்டி, சொர்ணவிலாச நாடக கதாப்பிரசங்க சபை

ஷெ சபையின் அங்கத்தவரான ஆசிரியர் சைவப் புலவர் ச. சச்சிதானந்தசிவத்திற்கும் அவருடைய பாரியாருக்கும் ஷெ சபையின் சார்பில் சென்ற 7ம் திகதி அன்பளிப்பு வழங்கப்பட்டது. "நாடகக் கலை வளர்ச்சியைப் புதிய பாணியில் அமைக்க உழைக்கும் இளம் கலைஞர்களை ஆதரிப்பதே எனது இலட்சியமாகும்" என்று கலை அரசு திரு. கே. சொர்ணலிங்கம் அவர்கள் அன்பளிப்பு வைபவத்தின்போது சொற்பொழிவாற்றுகையில் கூறினர். புதுமணத் தம்பதிகளான சச்சிதானந்தசிவம் தம்பதிகளுக்கு ஆசி தெரிவித்துப் பேசுகையில் கலையரசு திரு. கே. சொர்ணலிங்கம் திரு ச. சச்சிதானந்தசிவத்தின் அபாரமான கலைச்சேவையையும் சபையின் சேவையையும் பாராட்டினர்கள். ஆசிரியர் திரு சீ. விநாசித்தம்பி அவர்களால் மங்கல வாழ்த்துப் பாக்கள் பாடப்பட்டன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்
யாழ்ப்பாணம் சக்கானை
சண்முகம் துரைசிங்கம்
—வழக்காளி.

இல, M B 32
எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு
1 முகமது சுல்தான் முகமது மீருசாய்பு
2 பெண் சுல்தான் மூகியதீன் நாச்சியாவும்
யாழ்ப்பாணம் சோனகதெரு
3 சேகு சுல்தான் அப்துல் காதர் சதக்கத்துல்லா
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 32-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக காணிகள் 1956ஞு ஆடிமீ 10உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

### காணிகள் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை, செம்பகநாச்சிக்குளம் கரை பர. நி. இல. 13/.6 குளி ¾ வீடும் செய்பயிரும். வடக்கெல்லை காணியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழமையான வழி வாய்க்காலும் உறுதிப்படி எல்லை கிழக்கு சுல்தான் அப்துல்காதர் மகள் பாத்தும்மா நாச்சியாவின் ஆதனம் வடக்கு கீழே சொல்லப்படும் காணி, மேற்கு ரோட்டு. தெற்கு முகமத் லெப்பே பெண் சுல்தான் முகிதீன் நாச்சியாவின் ஆதனம். வடக்கெல்லை சுவரின தெற்கு அரைவாசி ரோட்டில் இருந்து 12 முழம் நீளம் பறநீங்கல்.

2 மேற்படி வண்ணார்பண்ணை இறை 'செம்பகநாச்சிகுளம்கரை'' பரப்பு நில இலா. ½ யும் செய்பயிரும். எல்லை கிழக்கு மூ முகமதுவும் பங்காளருடைய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு தெரு. தெற்கு மேலே விபரித்த காணி. இதில் சொரியலாய் ¼ பங்கும்.

ஒரு துண்டுக் காணி 1956ஞு ஆடிமீ 21உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

3 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக தென்மராட்சிப் பகுதி எழுதுமட்டுவாள தெற்கு கோயிறபற்று கிளாலிஇறை மூடிச்ச வீரியன் வளவு பர நி. இல. 3/1, இமைலை பர. நி இல. 10 ⅛, முடவீரிங்கன் தெனடல பர. நி இல. 5½, ஊ தந்தையன் பூசன் குடியருந்த வளவு ப. நி. இ. 33 3/8, முடவீரிங்கன் தென்டல ப. நி இ. 5½, முகங்கியன் கூடல் பர நி. இ 5, முடவீரிங்கன் தென்டலை ப நி இ 33 ¼, குறுமன் குடியிருப்பு ப. நி. இல. 5½, பனடிககாளியடி ப. நி. இல 8 3/8, புளுகன் தெனடல் பர. நி இல. 8 3/8, நரங்கு தேவன் கலட்டி பர. நி. இல. 1 1/8, கரடிககாடு பர. நி இல. 16½, புழுகன்பாவை பர. நி இல 5½, புழுகன் தென்டல் பர. நி. இல 8 3/4, இவை எல்லாம் ஒருங்கு சேர்ந்து பர. நி. இலாச்சம் 147 1/2, ஒரே காணியாய் இருக்கின்றன. இப்போ இவை பர. நி இலாச்சம 300ஆக இருக்கின்றன. பனை வடலிகளும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு விஞசி வேலனின் ஆதனமும், மரியான் பேதுறுவும் மறுபேரின் ஆதனமும். வடக்கு வயித்தி அந்தோனிக்கும் விஞசி சரவணைக்கும் மறுபெயருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு மணல் தெரு. தெற்கு விஞசி சரவணைக்கும் விஞசி மடந்தையனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள்.

சே. இரத்தினசபாபதி,
கொமிஷனா.
51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
21-5-56.
M. 287 25-5 56. (து 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11128.
1 சின்னப்பு ஆறுமுகம்,
2 பெண் சிவனேசுவரி ஆனைக்கோட்டை, தற்போது நாவலப்பிட்டி, தபால் கந்தோர்
—வழக்காளிகள்,
எதிர்
நாகமுத்து கந்தையா, உபாத்தியாயர் சிறுப்பிட்டி வடக்கு.
—எதிராளி,

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11128-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1956 ஞு ஆனி மீ 30உ சனிககிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1 புத்தூரைச் சேர்ந்த சிறுப்பிட்டியில் கிராவி என்னும் காணி செ. இ. 4 புதிய கல்வீடும், கிணறும். எல்லை கிழக்கு பூததம்பி கைம்பெண் சின்னச்சுப்பிள்ளையின் ஆதனம். வடக்கு கன்னியர் சின்னையாவின் ஆதனம். மேற்கு ரோட்டு தெற்கு அம்பலம் சின்னத்தம்பியின் ஆதனம். இவை அடங்கிலும்.

2 புததூர் தெற்கில் நாறன் கொல்லையும் முருகன் திடல் என்னும் காணி செ இ. 19 1/2 கிணறும், பனைகளும் எல்லை கிழக்கு சின்னப்பா கைம்பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு பண்டாரி பொன்னுவின் ஆதனமும் வன்னித்தம்பிபெண்வள்ளிப்பிள்ளையின் ஆதனம் கால் பாதையும் மேற்கு பெரியதம்பிரான் கோவிலுக்குரிய ஆதனம் அப்புக்குட்டி பெண் பொன்னியின் ஆதனமும் மறுபேரும், ஒழுங்கையும், தெற்கு முருகன் எல்லுப்போலையின் ஆதனமும் ஒழுங்கையும் இவை அடங்கிலும் சொரியலாக 1/6 பங்கு.

3 சிறுப்பிட்டியில் தம்பனை வடக்கில் தாளைமடையும் மறுபிரிவுகளும் என்னும் காணி செ இ. 22 அளவின்படி செ. இ. 23 குளி 9. எல்லை கிழக்கு மாணிகக வாசகர் பெண் தங்கம்மாவின் ஆதனம், வடக்கு சின்னப்பா தம்புவும் மறுபேரும். மேற்கு சங்கரி வல்லிபுரமும் மறுபேரும். தெற்கு இளையதம்பி பெண் ஆச்சிகுட்டியும் மறுபேரும் இவை அடங்கிலும்.

வ அ. துரையப்பா,
கொமிஷனர்.
யாழ்ப்பாணம்
19-5-56.
M. 291. 25-5 (து. 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி
துரையப்பா பத்தர்
வேணுகோபால்
—வழக்காளி.

இல. 10996
எதிராக
1 மாவிட்டபுரம் கனகசபை வீரசிங்கம் ஓவசியர்
2 வெள்ளவத்தை No. 6, 4-ம் ஒழுங்கை வைதிலிங்கம் நவரெத்தினமும் பெண்
3 ஜெகதம்பிகையும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10996-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிககப்படும் இரு துண்டுக் காணிகள் 1956ஞு ஆடிமீ 27உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிககுளிக் கோயிற்பற்று கரையூர் இறை 'கட்டுப்புலம் நி. பரப்பு. 3½ ம், வீடும், கிணறும் மற்றும் செய்பயிர் வான்பயிர் களும். எல்லை கிழக்கு சோமசுந்தரம்பிள்ளை கணபதிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு கந்தையாவும், பெண் பூரணத்தின் ஆதனம், மேற்கு நியுமென் பெண் நல்லம்மாவின் ஆதனம், தெற்கு ரோட்டு. இக்காணி D 210/.05ம் புததகததில் பதியப்பட்டிருக்கிறது.

ஷெ சுண்டிக்குளிக் கோயிற்பற்று சுண்டிக்குளி இறை 'கட்டுத தோட்டமும்', 'கட்டுப்புலமும்' நி. ப. 7-ம் 12 குளியும் D 129/160-ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது. இதில் தெற்கில் பிரிககப்பட்ட நி ப. 2-ம். வான்பயிர் செய்பயிரும். புதுக்கக் கட்டப்பட்ட கல்வீடும், கிணறும். எல்லை கிழக்கு தங்கவேலு பெண் மாணிக்கத்தின் ஆதனம். வடக்கு மிகுதியாக இருக்கும் காணி டாக்குத்தர் சங்கரப்பிள்ளை சந்தியாப்பிள்ளைக்குடையது. மேற்கு அத்தியடி புது ரோட்டு. தெற்கு A. பரராஜசிங்கம் பெண் ஜெபராஜனுவின் ஆதனம், இக்காணி D 203/283ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51 4ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
21-5-56
M 288 25-5 (து 200)

## விலைக்கிருக்கின்றது

ஏறக்குறைய பத்து அந்தர் ஈயம் (பழைய அச்செழுத்து) விலைக்கிருக்கின்றது. விற்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

வண்ணார்பண்ணை சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் பார்வையிடலாம்.

மிகக் கூடிய கேள்வியாயிருந்தபோதும் எந்த ஒரு கேள்வியையும் ஏறகவேண்டுமென்னும் கட்டுப்பாடு அச்சகத்தாருக்கு இல்லை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வழககு இல. 10984.
வட்டுககோட்டை கிழக்கு
எஸ். சின்னத்தம்பி பொன்னையா
—வழக்காளி.
எதிராக
மானிப்பாய்
ஆறுமுகம் குமாரசாமி
—எதிராளி,

மேற்சொல்லிய இலக்க வழககில குறிதத கோட்டார் எனககு அனுப்பிய கமிஷன கட்டளைப் பிரகாரம் இதன் கீழ்க் காணப்படும் காணி 1956 ஆ ஜூலைமீ 14 உ (ஆனி. 31) சனிககிழமை முற்பகல் 10மணியளவில் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலதில் என்னால் விற்கப்படும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழப்பாண டிஸ்திறிக் வலி மேற்கு, மானிப்பாய்க் கோயிற்பற்று. மானிப்பாய் இறை. ''எளுநூள்ளியும், தியாகதோட்டம் அல்லது தியாகத்தொட்டை'' நிலைப்பரப்பு ஐந்தும், குளி எட்டும், வீடும் செய் வான்பயிர்களும் இக்காணியின் வடகிழககில் இருககும் கிணற்றில் பங்கும், தூர்வைப்பங்கும், இக் காணியிலிருநது குறிதத கிணற்றுக்குப் போக்கு வரவு செய்ய விடப்பட்ட வழிவாய்ககால் பாவிப்புரித்தும். எல்லை கிழக்கு இலகுப்பிள்ளை கந்தையா பெண் இரதத்னத்துக்குரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு கை ஒழுங்கை முகப்பும், மாணிககவாசகர் பெண் தங்கம்மாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும், இக கா[illegible]

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

நாள்: வைகாசி மீ கச உ (27-5-56) ஞாயிற்றுக் கிழமை

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

மு ப. 10—பி. ப. 1 மணி கடவுளாராதனை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரம் படித்தல் தமிழ் மறையோதல், நால்வர் பூசை. மாகேசுர பூசை

இரா நிகழ்ச்சிகள்:

தலைவர் பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்

இரவு 6½—7 தமிழ் மறையோதல் — திரு. மு. சுப்பையா தேசிகர்

சொற்பொழிவுகள்:

1. தலைவர் முன்னுரை
2. "சம்பந்தரின் சமய வாதம்" செல்வன் இ. பகேந்திரன் (இந்துக்கல்லூரி மாணவன்)
3. "தோணிபுரத் தோன்றல்" செல்வன் சோ. பத்மநாதன் (இந்துக்கல்லூரி மாணவன்)
4. "திருஞான சம்பந்தர் திருமணம்" சைவப்பிரசாரகர் திரு. பொ. அப்புக்குட்டி

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம், 22-5-56, (து. 200)

E 231/25-ல் பதிவு செய்யப்பெற்றது.

மறு விபரம் அறிய விரும்புவோர், வழக்காளியின் பிறக்றர், சித்தங்கேணி மெஸ். வி. கே. சுப்பிரமணியம் அவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

பெ. முத்துத்தம்பி
வெந்திஸ் கமிஷனர்.
சுதுமலை தெற்கு
மானிப்பாய்
1956ஆ மேமீ 17உ.
M 289 25-5-56. (து. 50)


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.







வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மலக
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி [illegible] ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. [illegible] பொன்னம்பலம் [illegible] அவர்களால் 25-5-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.